www.Padasalai.Net www.CBSEtips.in

10T

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2019

-----

## வகுப்பு 10

காலம்: 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **10×1=10**

1) செந்நாப்போதார் குறிப்பிடும் கூரான ஆயுதம் எது?
   அ) பெரிய கத்தி ஆ) இரும்பு ஈட்டி
   இ) உழைத்ததால் கிடைத்த ஊதியம் ஈ) வில்லும் அம்பும்
2) தமிழர் பண்பாட்டின் மகுடம்
   அ) வேளாண்மை ஆ) பொன்ஏர் பூட்டுதல்
   இ) உழவு ஈ) கொழுவை அழுத்துதல்
3) ஐம்பெருங்காப்பியங்களுள் முதற்காப்பியமாகத் திருத்தணிகையுலா குறிப்பிடுவது
   அ) சீவகசிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) வளையாபதி
4) 'மீட்சி விண்ணப்பம்' - கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்
   அ) கண்ணதாசன் ஆ) ஜெயகாந்தன் இ) பாரதிதாசன் ஈ) வேணுகோபாலன்
5) **கூற்று 1** : தன்னையறிதல் என்பதிலும், தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பு காட்டாதவர் ஜெயகாந்தன்.
   **கூற்று 2** : தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.
   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு. ஆ) கூற்றுகள் 1ம் மற்றும் 2ம் தவறு.
   இ) கூற்றுகள் 1ம் மற்றும் 2ம் சரி. ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி.
6) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.
   அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்
   இ) பேகன், திருமுடிக்காரி ஈ) நெடுஞ்செழியன், கிள்ளிவளவன்
7) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
8) **தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க:**
   அ) பெருந்திணை - பொருந்தாக் காமம்
   ஆ) கைக்கிளை - ஒருதலைக்காமம்
   இ) பொதுவியல் திணை - போர் நெறிகளைக் கூறுவது
   ஈ) தும்பைத் திணை - எதிர் எதிர் நின்று போர்புரிவது
9) சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
10) பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
    நல்லார் தொடர்கை விடல்.
    - இக்குறட்பா குறிப்பிடும் எண்ணுப்பெயரைக் குறிப்பிடுக.
   அ) ஏழு ஆ) எட்டு இ) ஒன்பது ஈ) பத்து

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக.** **3×2=6**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:**

11) கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.
12) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
13) 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!' - **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**
14) காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

10T

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

15) கொடையில் சிறந்த நால்வரைக் குறிப்பிடுக.

16) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

17) ஜெயகாந்தனின் மொழிபெயர்ப்பு நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

18) **தமிழாக்கம் தருக:**

Among the fiv e geogr aphical divisions of the T amil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands.

19) **கீழ்க்கண்ட ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக:**

அ) உதகமண்டலம் ஆ) மன்னார்குடி

20) **கீழ்க்கண்ட மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக:**

அ) கண்ணும் கருத்தும் ஆ) ஆறப்போடுதல்

21) **கீழ்க்கண்ட சொற்களின் அகராதிச் சொற்களை எழுது:**

அ) ஆசுகவி ஆ) மதுரகவி

22) **கலைச்சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக:**

அ) Document ஆ) Philosopher

**ஐந்து அல்லது ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.** **2×4=8**
**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:**

23) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

24) ம.பொ.சி. பெற்ற செவிச்செல்வம் கருத்துகளைப் பற்றி விளக்கி எழுதுக.

25) **நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக:**

| **மகளிர் நாள்விழா** | |
|---|---|
| **இடம் : பள்ளிக் கலையரங்கம்** | **நாள் : 25.10.2019** |
| கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை. | |

26) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **2×6=12**

27) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

**(அல்லது)**

இரண்டாம் இராசராச சோழனின் நாட்டுவளம், ஆட்சிச் சிறப்பு பற்றி மெய்க்கீர்த்திப் பாடலின் வழி விளக்குக.

28) திருமந்திர மறைபொருளைப் பல்லாயிரக்கணக்கான மக்களின் பிறவிப்பிணி நீங்க உபதேசித்த இராமானுசர் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **1×4=4**

29) 'தூசும் துகிரும் ..........' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

----------

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593